

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நேற்று முன்தினம் (24.10.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டு, சுற்றுச்சூழல் கல்விக்காக வருகைதந்த மாணவர்களுடன் சென்று பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் “A Sun from the south” என்னும் நூலினை வெளியிட்டார். இந்நூலினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தனது ‘திசைதோறும் திராவிடம்’ திட்டத்தின்கீழ், கே.எஸ்.எல். மீடியாவுடன் இணைந்து கூட்டு வெளியீடாக வெளியிடுகிறது. இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மரு.பி. சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, (பொறுப்பு) மரு. மா. ஆர்த்தி மற்றும் இந்து தமிழ்த்திசை துணை ஆசிரியர் எ.வள்ளியப்பன், புத்தகத்தின் மொழிபெயர்ப்பாளர் ஆர். விஜயசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.10.2025) தலைமைச் செயலகத்தில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி சந்தித்து, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 202425–ஆம் நிதியாண்டில் 52 கோடியே 72 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியதில் 2024 – 25 ஆம் ஆண்டிற்கான மொத்த ஈவுத்தொகையான 15 கோடியே 39 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாயில் இடைக்கால ஈவுத்தொகையாக 4 கோடியே 99 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஏற்கனவே தமிழ்நாடு அரசிற்கு செலுத்தப்பட்ட நிலையில், தற்போது இறுதிப் பங்கு ஈவுத்தொகையான 10 கோடியே 39 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. கி.சாந்தி, பொது மேலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஆர். நர்மதாதேவி ஆகியோர் உடனிருந்தனர்.

## சர்வதேச அரங்கில் வெற்றிக் கொடி நாட்டி

# தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தந்த கார்த்திகா - அபினேஷை வாழ்த்தி மகிழ்கிறோம்!

## பஹ்ரைனில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற கபடி வீரர்களைப் பாராட்டி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!



**சென்னை, அக்.26-**

**கபடி வீராங்கனை கார்த்திகா மற்றும் வீரர் அபினேஷ் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

பஹ்ரைனில் நடைபெற்ற 3rd Asian Youth Gamesல், இந்திய கபடி அணி Boys மற்றும் Girls பிரிவில் தங்கப் பதக்கங்களை வென்றது அறிந்து மகிழ்ந்தோம்.

Girls அணியில் சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கை கார்த்திகாவும், Boys அணியில் தம்பி அபினேஷ் மோகன்தாஸும் இடம்பெற்றிருந்தது நமக்கெல்லாம் பெருமை.

தம்பி அபினேஷ் தேனியில் உள்ள நமது SDAT விடுதியில் தங்கி பயிற்சி எடுத்தவர் என்பதும், தங்கை கார்த்திகா எளிய பின்புலத்தில் இருந்து புறப்பட்டு இந்த உயரத்தை அடைந்திருக்கிறார் என்பதும் கூடுதல் சிறப்பு.

சர்வதேச அரங்கில் வெற்றிக்கொடி நாட்டி தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தந்துள்ள கார்த்திகா மற்றும் அபினேஷை வாழ்த்தி மகிழ்கிறோம். இவர்கள் இருவரும் மென்மேலும் பல வெற்றிகளைக் குவிக்கட்டும்!

இவ்வாறு அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா தலைமை அறங்காவலர் செய்யது முகமது காஜி ஹூசைன் சாஹிப், நாகூர் தர்கா தலைவர் மற்றும் பரம்பரை அறங்காவலர் காஜி செய்யது முகமது கலிபா சாஹிப் காதிரி ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 25 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும் மொத்தம் 33 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 43.20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ்’ அறக்கட்டளை நிதியிலிருந்து –22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட

# 33 வீரர், வீராங்கனைகள் - சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்றிட நிதி!

## ரூ.43.20 லட்சத்திற்கான காசோலைகளை – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக்.26-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 25 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும் மொத்தம் 33 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 43.20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் அவர்கள், உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றார்.

இந்த அறக்கட்டளை நிதியின் கீழ் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்கு தேவையான அதிநவீன விளையாட்டு உபகரணங்களை வாங்கி கொள்ளவும், தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 17.11.2025 முதல் 24.11.2025 வரை தாய்லாந்தில் நடைபெறும் உலக திறன் விளையாட்டு போட்டிகளில் (World Ability Sports Games 2025) கலந்து கொள்ள உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய பாரா சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்கள் பா.மனோஜ், அருள்ராஜ் பாலசுப்பிரமணியன், செ. முனியசாமி, த. கதிர், க.கணேசன், கே.எம்.ஷேக் அப்துல் காதிர், குமரேசன் ஆனந்தன், சா.வினோத் குமார், ரா.பிரவீன் குமார், ச.குரு பாஸ்கரசேதுபதி, வே.பிரகாஷ், மு. சோனை, ச.பிரசாந்த், கெவின் ஜோசப் ஆண்டனி, க. சஞ்சய் கன்னா, ரா.கோகுலகண்ணன், மு. ஆனந்த்ராஜ், பி.சந்தனகுமார், வீராங்கனைகள் கு.ஆனந்தி, ர.வெண்ணிலா, சி.இன்பத்தமிழி, கு. விஜயஸ்ரீ ஆகிய 22 மாற்றுத்திறன் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவினமாக தலா 1,65,000/ ரூபாய் என மொத்தம் 36,30,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் 2.12.2025 முதல் 6.12.2025 மாலத்தீவில் நடைபெற உள்ள 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் கலந்து கொள்ள உள்ள தேசிய அளவிலான கேரம் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனைகள் எல்.கீர்த்தனா, எஸ்.இளவழகி, 6வது கேரம் உலகக்கோப்பை போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை வி.மித்ரா ஆகிய 3 விளையாட்டு வீராங்கனைகளுக்கு போட்டிக்கான செலவினமாக தலா 1,50,000/ ரூபாய் என மொத்தம் 4,50,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் தடகள விளையாட்டு வீராங்கனைகள் பி. கனிஸ்ரீ, ரூபிகா, எ.தாரணி, எம். நந்தனா, பார்த்திபா செல்வராஜ், கே.யாமினி, விஜயலட்சுமி, கே.நந்தினி ஆகிய 8 வீராங்கனைகளுக்கு பயிற்சிக்கான விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட தலா 30,000/ ரூபாய் என மொத்தம் 2,40,000 ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 25 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும் மொத்தம் 33 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 43.20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.